**IN THE COURT OF THE I-ADDITIONAL DISTRICT COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**OS.No.9/2021- PW-3**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கோவிந்தசாமி | District | இராணிப்பேட்டை |
| Father Name | திரு.ராஜி | Occupation | உதவியாளர், வாலாஜாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகம் |
| Village /Area | வாலாஜாப்பேட்டை | Age | 43 |
| Taluk | வாலாஜாப்பேட்டை | ID Card No. | Verified |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 27.10.2025.

**முதல் விசாரணை:**

நான் வாலாஜாப்பேட்டை சார்பதிவாளர் அலுவலகத்தில் உதவியாளராக (On deputation) பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் சாட்சி சொல்வதற்கு வாலாஜாப்பேட்டை சார்பதிவாளருக்கு அழைப்பாணை இந்நீதிமன்றத்திலிருந்து வந்ததை அவர் பெற்றுக்கொண்டு என்னை அவர் சார்பாக நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க அனுமதி வழங்கி கொடுத்த கடிதம் **நீ.ம.சா.ஆ.1** ஆகும். சார்பதிவாளருக்கு இந்நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களின் உண்மை நகல்களை கொண்டு வந்துள்ளேன். ஆவண எண்.918/2019 விக்கிரைய அக்ரிமெண்ட் உண்மை நகல் **வா.சா.ஆ.32** ஆகும். ஆவண எண்.3041/2020 விக்கிரைய அக்ரிமெண்ட் ரத்து பத்திரம் உண்மை நகல் **வா.சா.ஆ.33** ஆகும். ஆவண எண்.3042/2020 பொது அதிகார ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.34** ஆகும். ஆவண எண்.4277/2020 பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணம் உண்மை நகல் **வா.சா.ஆ.35** ஆகும். வா.சா.ஆ.32 முதல் வா.சா.ஆ.35 முடிய உள்ள ஆவணங்கள் வாலாஜா நகர் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அந்த ஆவணங்களின் உண்மை நகல்களை தான் சார்பதிவாளர் உத்தரவின் பேரில் இன்று இந்நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்கிறேன்.

**1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:–**

எங்கள் பதிவுத்துறை விதிகளுக்குட்பட்டு தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் தான் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்படும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள உண்மை நகல்கள் ஆவணங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களால் தாக்கல் செய்யப்பட்டு, சரியான முறையில் இருந்ததால் தான் எங்கள் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழிகாட்டுதல் மதிப்பீட்டின்படி அந்த ஆவணங்களுக்கான முத்திரை கட்டணங்கள் செலுத்தப்பட்டுள்ளதால் தான் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(2–ம் பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 1–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை 2–ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையாகவும் பாவித்துக்கொள்ளப்பட்டது.)

BALAKRISHNAN

Digitally signed by BALAKRISHNAN
DN: cn=BALAKRISHNAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

I Additional District Judge,
Ranipet.